<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

COS.No.38/2023 பெயர் : பக்தவசலம் நாள் : 23.10.2025

**பி.வா.சா.1** ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் இரண்டாம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுதப் படிக்க தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால், நான் சொல்லி தயார் செய்யப்பட்டது, அதில் உள்ள விபரங்கள் எனக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. வழக்கில் என்ன எதிர்வாதம் செய்து வருகிறேன் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியும். நான் 36 ஆண்டுகளாக சாயப்பட்டறை (Screen Printing) நடத்தி வந்தேன், 2016-ம் வருடம் நிறுத்திவிட்டேன். ஜோதி டெக்ஸ்டைல்ஸ் பிரிண்டர்ஸ் என்ற பெயரில் நடத்தி வந்தேன். சசிக்குமார் என்பவரை தவிர சந்தானம் என்பவர் என் மீது வழக்கு போட்டுள்ளார். அறிவிப்பு மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்தில் சுஜாதா பிரிண்டர்ஸ் உங்கள் மீது COS வழக்கு தொடர்ந்துள்ளார்கள் என்றால், இல்லை. அதேபோல் குற்றவியல் நீதிமன்றத்தில் என் மீது பல வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால், 2 வழக்குகள் நடந்தது, அதை பேசி சமாதானம் ஆகிவிட்டது. O.S.322/2022 என்ற வழக்கு சசிக்குமார் என்பவரால் எனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதில் எதிர்வாதம் தாக்கல் செய்து, வழக்கு நடத்தினேன் என்றால், சரிதான். அந்த எதிர்வாதத்தில் சசிக்குமாருக்கும், எனக்கும் நடந்த வரவு, செலவு பற்றிய முழு விபரங்கள் சொல்லியுள்ளேன் என்றால், அந்த வழக்கிற்கு தேவையான விபரங்களை மட்டும் கூறினேன். மேற்படி வழக்கு எனக்கு எதிராக தீர்ப்பாகியுள்ளது என்றால், சரிதான். அதேபோல் கார்த்திகா என்பவரும் இதே நீதிமன்றத்தில் COS.36/2023 என்ற வழக்கு எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான், கார்த்திகா சசிக்குமாரின்

கொழுந்தியா ஆவார். அந்த வழக்கிலும் எனக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால், அப்படிதான் சொன்னார்கள். மேற்படி 2 வழக்குகளில் தாக்கல் செய்த எதிர் வாதங்களிலும், இந்த வழக்கின் எதிர்வாதத்திலும் சசிக்குமாரின் தூண்டுதலின் பேரில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு, எதிர்வாதம் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி 2 வழக்குகளின் ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஆமாம். நீங்கள் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்தால், உண்மை நிலவரம் தெரிந்து விடும் என்றால், சரியல்ல, நான் தாக்கல் செய்துள்ளேன். சசிகுமார் தாக்கல் செய்த O.S.322/2022 வழக்கில் எனது எதிர்வாதத்தில் பாதுகாப்பிற்காக 2 காசோலைகள் கொடுத்ததாக நான் கூறியுள்ளேன் என்றால், சரிதான். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான காசோலைகள் மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால், சரிதான், அதை நான் பூர்த்தி செய்யவில்லை. நான் தான் பூர்த்தி செய்து வந்து, அவர்கள் முன்னிலையில் கையொப்பம் செய்துக் கொடுத்தேன் என்றால், சரியல்ல, நான் பூர்த்தி செய்யவில்லை. COS.36/2023 என்ற வழக்கு 1 காசோலையின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி COS.36/2023 என்ற வழக்கின் எதிர்வாதத்தில் சசிக்குமாருக்கு கொடுத்த 2 காசோலைகளில் 1 காசோலை தான் வழக்கு சம்மந்தப்பட்ட காசோலை என கூறியுள்ளேன் என்றால், சரிதான். வாதி அவருக்கு கொடுக்கப்பட்ட காசோலையின் அடிப்படையில் தான் தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல, அது சசிக்குமாருக்கு கொடுக்கப்பட்ட காசோலை ஆகும், வாதி யார் என்று எனக்கு தெரியாது. வாதி யார் என்று நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. ஏற்கனவே தாக்கல் செய்த எதிர்வாதத்தில் முழு விபரங்களையும் குறிப்பிடாமல், தற்போது வழக்கிற்காக வழக்கு காசோலைகளை மேற்படி சசிக்குமாரிடம் கொடுத்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள்

என்று சொன்னால், சரியல்ல. அதேபோல் 2016-ல் தொழிலை நான் நிறுத்தி விட்டதாக கூறியிருந்தாலும், வங்கி கணக்கை எப்போது முடித்துள்ளீர்கள் என்றால், 29.03.2016-ல் வங்கி கணக்கை முடித்தேன். வங்கி கணக்கை முடிக்கும்போது, காசோலைகளை வங்கியிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியும். நான் எல்லா காசோலைகளையும் வங்கியிடம் ஒப்படைத்து விட்டேன், பழைய காசோலைகளை வைத்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. தொழில் நஷ்டம் அடைந்ததால் தான் நிறுத்தி விட்டேன் என்றால், சரியல்ல, தொழில் நன்றாக தான் நடந்தது. நான் தொழிலுக்காக பல நபர்களிடம் வாங்கிய கடனை செலுத்தாமல், பொய்யான வகையில் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால், சரியல்ல. அதேபோல் தான் வாதியிடம் வாங்கிய கடனையும் ஏமாற்றுவதற்காக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால், சரியல்ல, சசிக்குமார் தான் பொய்யான வகையில் வாதியை வைத்து தாவா தாக்கல் செய்துள்ளார். எனக்கும், வாதி மகேஷ்குமாருக்கும் நடந்த வரவு, செலவு சம்மந்தமாக சசிக்குமாருக்கு எந்த சம்மந்தமும் இல்லை, மகேஷ்குமாருக்கு செலுத்த வேண்டிய கடனை ஏமாற்ற வேண்டி பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

COS.No.38/2023 Dated : 23.10.2025
PSJC, Erode.